**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**CUDDALORE DISTRICT, CUDDALORE**

**C.C.No.72 of 2024**

அரசுதரப்பு **8 -**வது சாட்சியின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பச்சமுத்து | வயது | : | 63 |
| தந்தை பெயர் | : | நாகராஜன் | தொழில் | : | காய்கறி வியாபாரம் |
| கிராமம் | : | வண்டிபாளையம் | ஜாதி | : | ------- |
| தாலுக்கா | : | கடலூர் | சமயம் | : | ------- |
| மாவட்டம் | : | கடலூர் | மொபைல் | : | 9626605013 |

Solemnly affirmed in accordance with the provisions of Act XIV of 1967 விதிமுறைகளின்படி 10.06.2026 நாளாகிய இன்று செல்வி**. R.**தனம்**, B.A., B.L.,** தலைமை நீதித்துறை நடுவர்**,** கடலூர்**,** அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**(**எதிரி முன்னிலை**,** வழக்கறிஞர் முன்னிலை**)**

முதல் விசாரணை**:**

நான் வண்டிபாளையத்தில் குடியிருக்கிறேன். 3 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் நினைவில்லை, காலை 09.00 மணியளவில் கடையை முடித்துவிட்டு வீட்டிற்கு செல்லும்போது பார்வதி ஆயில்மில் அருகே எங்கள் ஊரைச் சேர்ந்த சுதாகர் மகன் தமிழ் இருசக்கர வாகனத்தில் வந்தபோது ராஜா என்பவரும் அவரது மனைவியும் வந்த இருசக்கர வாகனம் மோதி தமிழ் கீழே விழுந்துவிட்டார். அவருக்கு பின்தலையில் அடிபட்டது. அவரை ஆட்டோவில் ஏற்றி கடலூர் GHக்கு கொண்டு சென்றார்கள். மறுநாள் காலை அவர் இறந்துவிட்டார். சம்பவம் நடந்த அன்று 10, 11 மணிக்கு போலிசார் வந்து படம் போட்டார்கள். என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம்

காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள முதல் கையெழுத்து என்னுடையது. பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

அடிபட்டவர் பெயர் என்ன என்றால் சிறுவயதிலிருந்து தமிழ் என்று தான் கூப்பிடுவோம். சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு நான் சென்றேன் என்றால் காலை 09.00, 09.30 மணிக்கு சென்றேன். எத்தனை மணிக்கு வீட்டிற்கு சென்றேன் என்றால் 10.00 மணிக்கு வீட்டிற்கு சென்றேன். நான் கையெழுத்து போட்ட அன்று தான் விபத்தை பார்த்தேன். பார்வை மகசரை படித்து காட்டி தான் கையெழுத்து வாங்கினார்கள். அதில் நான் கையெழுத்து செய்த நேரம், தேதி எழுதியிருந்தது என்றால் சரிதான். விபத்தை நேரில் பார்த்ததாக போலிசில் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. நான் முதல்விசாரணையில் சொன்ன சங்கதிகள் அனைத்தும் உண்மையல்ல என்றும், இறந்த நபர் என் ஊரைச் சேர்ந்தவர் என்பதால் பொய்யாக சாட்சி கூறுகிறேன் என்றால் சரியல்ல. விபத்தில் எத்தனை வண்டி சம்மந்தப்பட்டது என்றால் ஒரு வண்டி சம்பந்தப்பட்டது. எத்தனை வண்டிகள் மோதிக்கொண்டது என்றால் நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை.

மறுவிசாரணை-இல்லை.

/ஒம்.இரா.தனம்/
தலைமை நீதித்துறை நடுவர்,
கடலூர்

**(Chapter XXII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**CUDDALORE DISTRICT, CUDDALORE**
**<u>C.C.No.72 of 2024</u>**

அரசுதரப்பு **9 -**வது சாட்சியின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தனுஷ் | வயது | : | 25 |
| தந்தை பெயர் | : | சின்னதுரை | தொழில் | : | மரவெட்டும் தொழில் |
| கிராமம் | : | வண்டிபாளையம் | ஜாதி | : | ------- |
| தாலுக்கா | : | கடலூர் | சமயம் | : | ------- |
| மாவட்டம் | : | கடலூர் | மொபைல் | : | 7010692370 |

Solemnly affirmed in accordance with the provisions of Act XIV of 1967 விதிமுறைகளின்படி 10.06.2026 நாளாகிய இன்று செல்வி**. R.**தனம்**, B.A., B.L.,** தலைமை நீதித்துறை நடுவர்**,** கடலூர்**,** அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**(**<u>எதிரி முன்னிலை**,** வழக்கறிஞர் முன்னிலை</u>**)**

<u>முதல் விசாரணை**:**</u>

நான் வண்டிபாளையத்தில் குடியிருக்கிறேன். 07.09.2023 அன்று காலை 10.00 மணிக்குள் பார்வதி ரைஸ்மில் அருகில் நடந்த விபத்து சம்பந்தமாக படம் வரைந்து திருப்பாபுலியூர் போலிசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னுடன் பச்சமுத்து என்பவர் கையெழுத்து போட்டார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்ததாக பொய்யாக சாட்சி கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை-இல்லை.**

/ஒம்.இரா.தனம்/
தலைமை நீதித்துறை நடுவர்,
கடலூர்

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**CUDDALORE DISTRICT, CUDDALORE**

**<u>C.C.No.72 of 2024</u>**

அரசுதரப்பு **10 -**வது சாட்சியின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜா | வயது | : | 45 |
| தந்தை பெயர் | : | கணேசன் | தொழில் | : | ஓட்டல் தொழில் |
| கிராமம் | : | திருப்பாபுலியூர் | ஜாதி | : | ------- |
| தாலுக்கா | : | கடலூர் | சமயம் | : | ------- |
| மாவட்டம் | : | கடலூர் | மொபைல் | : | 9940899404 |

Solemnly affirmed in accordance with the provisions of Act XIV of 1967 விதிமுறைகளின்படி 10.06.2026 நாளாகிய இன்று செல்வி**. R.**தனம்**, B.A., B.L.,** தலைமை நீதித்துறை நடுவர்**,** கடலூர்**,** அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**(**<u>எதிரி முன்னிலை**,** வழக்கறிஞர் முன்னிலை</u>**)**

<u>முதல் விசாரணை**:**</u>

நான் திருப்பாபுலியூரில் குடியிருக்கிறேன். இறந்த கோகுல் என்பவரை தெரியும். அம்பேத்கார் நகரை அடுத்து உள்ள இடத்தில் நான் கோழி பண்ணை வைத்து நடத்தி வருகிறேன். 06.09.2023 அன்று காலை கோழி பண்ணையை பார்த்துவிட்டு திரும்பிவரும்போது காலை 09.30 மணியளவில் கோகுல் அம்பேத்கார் நகரிலிருந்து திருப்பாபுலியூருக்கு இருசக்கர வாகனத்தில் வந்தார். அவருக்கு பின்னால் சுமார் 50 மீ தூரத்தில் நான் வந்தேன். Aristro பள்ளி அருகே வந்தபோது பார்வதி ஆயில் மில் எதிரே ஒரு ஆக்டிவா இருசக்கர வாகனத்தில் ஒரு ஆணும், பெண்ணும் வந்தார்கள். ஆண் வண்டியை ஓட்டினார். அவர்கள் திடீரென்று வலது பக்கம் வாகனத்தை திருப்பிவிட்டார்கள். அதனால் நேர் ரோட்டில் வந்துகொண்டிருந்த கோகுல்

வாகனத்தின் மீது மோதிவிட்டார்கள். மோதியதில் இரண்டு வண்டியில் வந்தவர்களும் கீழே விழுந்துவிட்டார்கள். பின்னால் வண்டிபாளையத்தில் இருந்து திருப்பாபுலியூர் நோக்கி மற்றொரு வண்டி பெரிய இருசக்கர வண்டி வேகமாக வந்து கீழே விழுந்த கோகுல் மீது மோதியது. அதில் கோகுலுக்கு தலையில் அடிபட்டு இரத்தம் வந்தது. எதிரி ஆக்டிவா வண்டியை ஓட்டி வந்தார். அவரை ஓரமாக உட்கார வைத்து தண்ணீர் கொடுத்தோம். பிறகு 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து தகவல் கூறினோம். காவல்நிலையத்திற்கு தகவல் கூறி போலிசார் வந்துவிட்டார்கள். எந்த மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்று தெரியாது. பெரிய வண்டியின் பதிவெண் தெரியாது. யார் ஓட்டி வந்தார்கள் என்று தெரியாது. கோகுல் இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். போலிசார் விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

கோகுல் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்றார். ஆக்டிவா வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்றது. ஆக்டிவா மேற்கு நோக்கி திரும்பியது. ஆக்டிவா வாகனம் கோகுல் வண்டியின் மீது மோதியது. பல்சர் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்தது. அடிபட்டவரை எனக்கு தெரியுமா என்றால் ஆளை பார்த்துள்ளேன் பெயர் தெரியாது. விபத்தின்போது அடிபட்டவரின் அப்பா, அம்மா யார் என்று தெரியாது. அதன்பிறகு தெரியும். விபத்து நடந்த இடத்திலிருந்து இறந்தவரின் வீடு எவ்வளவு தூரம் என்றால் ஒரு கிலோமீட்டர் இருக்கும். விபத்து நடந்தவுடன் காயம்பட்டவரின் வீட்டிற்கு தகவல் கொடுத்தேனா என்றால் நான் கொடுக்கவில்லை. அங்கிருந்தவர்கள் கொடுத்தார்கள். நான் விபத்தை பார்த்த விவரத்தை போலிசாரிடம் கூறினேன். 108 ஆம்புலன்சிற்கு கூறினேன். நான் போன்செய்து சொன்னவுடன் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள். மற்றொரு வண்டியை ஓட்டிவந்தவர் யார் என்று தெரியாது. போலிஸ் விசாரணையில் பல்சர் வண்டியை ஓட்டிவந்தவர் அப்பு (எ) அப்புராஜ், த/பெ. நாகராஜ், மாரியம்மன் கோவில் தெரு, T.புதூர் என்று கூறினேனா என்றால் இல்லை. ஆக்டிவா வாகனம் திடீரென்று வலதுபக்கம் திரும்பியதாக போலிஸ் விசாரணையில் கூறினேன். போலிஸ் விசாரணையில் சம்பவம்

நடந்ததாக சொல்லும் சமயத்தில் நான் நடந்து சென்றதாக கூறினேனா என்றால் இல்லை. போலிஸ் விசாரணையில் எனக்கு தெரிந்த அம்பேத்கார் நகரை சேர்ந்த சுதாகர் மகன் கோகுல் என்று சொன்னேன். விபத்து எப்படி நடந்தது என்று சுதாகரிடம் சொன்னேன். விபத்து நடந்த அன்றே கூறினேன். நான் அந்த அம்பேத்கார் நகரில் முக்கிய அரசியல் பிரமுகர் என்றால் சரிதான். நான் அடிக்கடி காவல்நிலையத்திற்கு பொதுபிரச்சனை சம்பந்தமாக செல்வேன் என்றால் சரிதான். நான் இந்த விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், அடிபட்டவர் எங்கள் ஊரைச் சேர்ந்தவர் என்பதால் என்னை சாட்சியாக போலிசார் சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல. ஆக்டிவா வாகனம் திடீரென்று வலது பக்கம் திரும்பி கோகுல் ஓட்டிய வாகனத்தின் மீது மோதியதாக தற்போது போலிசார் சொல்லிக்கொடுத்ததன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அப்பு(எ) அப்புராஜ்-ஐ எனக்கு தெரியும் என்றும், அவரை நஷ்ட ஈடு வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக பொய்யாக சாட்சி கூறுகிறேன் என்றால் சரியல்ல. உண்மையாக விபத்து நடந்த விவரத்தை மறைத்து போலிசார் தாக்கல் செய்த ஒருதலைபட்சமான இறுதியறிக்கைக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை-இல்லை.</u>

/ஒம்.இரா.தனம்/
தலைமை நீதித்துறை நடுவர்,
கடலூர்